1996 ஜூலை 17] [கலைஞர் மு. கருணாநிதி]

வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ரூ. 6 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்றாண்டுகளில் இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மேனிலைப் பள்ளிகளுக்கும், ஆய்வுக்கூடக் கட்டிடங்கள் கட்டித் தரப்படும்.

45. படிப்பில் ஆர்வமுள்ள மாணவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், பள்ளியிறுதி வகுப்பில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு ப்ளஸ் 2 வரை படிப்பதற்கான செலவையும், ப்ளஸ் 2 வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு அவர்கள் தொடர்ந்து மருத்துவக் கல்லூரியிலோ, பொறியியல் கல்லூரியிலோ அல்லது வேறு பட்டப் படிப்போ படிப்பதற்காகும் செலவையும் அரசே ஏற்றுக் கொள்ளும் என்று கழக அரசு அறிவித்து இந்த ஆண்டு முதலே இது செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. அடுத்த ஆண்டு முதல், மாநில அளவில் மட்டுமின்றி மாவட்ட அளவிலும் இந்த முறையில் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.

46. 1989-90-ல் கழக அரசு, தொழிற்கல்வி படிக்க முன்வரும் மாணவர்களில்-அவர்கள் குடும்பத்தில் அதுவரை யாரும் பட்டதாரிகள் இல்லாமல் இருப்பார்களேயானால், அவர்கள் பெற்ற மதிப்பெண்ணில் 5 மதிப்பெண்களை அதிகமாக்கி ஆணை பிறப்பித்ததால், அனைத்து சமூகங்களையும் சேர்ந்த பல மாணவர்கள் பயன்பெற்றார்கள். ஆனாலும், இத்திட்டம் நீதிமன்ற ஆணையினால் தொடர்ந்து நடைபெற முடியாமல் போயிற்று. எனினும், இப்போது இந்த அரசு, ஒரு குடும்பத்தில் இதுவரை யாருமே பட்டதாரிகள் இல்லாமல் இருந்து முதல் முதலாக தொழிற்கல்விப் படிக்க விரும்புவோரை ஊக்குவிப்பதற்காக ஒரு திட்டத்தை அறிவிக்கிறது. இதன்படி, பட்டதாரிகளாக இதுவரை யாருமே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களில் மொத்தம் 300 மதிப்பெண்களில் முதல் பத்து இடங்களைப் பெறுவோர்களின் கல்விக்கான முழுச் செலவையும் பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும், பல் மருத்துவக் கல்லூரிகளிலும், வேளாண்மைக் கல்லூரிகளிலும், கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலும் இந்த அரசே ஏற்றுக் கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

47. இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு உயர் கல்வி கற்பதில் முந்தைய அரசு விதித்திருந்த தடையை நீக்கி, தொழிற்கல்வி உள்ளிட்ட